## தெற்கு வீதி இணைப்பு செயற்திட்டம் - 2017

---

தெற்கு வீதி இணைப்பு செயற்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 மே 27 ஆந் திகதிய 3027-எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.05 ஆம் பிரிவின் iv ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. தெற்கு நெடுஞ்சாலையில் இணைக்கப்பட்ட வீதிகளின் 33 கிலோமீற்றர்களை மேம்படுத்தி புனரமைத்தல் மூலம் தேசிய போக்குவரத்து வினைத்திறனை முன்னேற்றுவது செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 12,248 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 95 மில்லியனென மதிப்பிடப்பட்டது, அதில் ரூபா 9,025 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 70 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2014 மே 27 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2018 திசெம்பர் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன்

நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்.

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் நன்கொடை வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள்இ அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் பந்தி 2.2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் வழங்கப்பட்ட இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ்களில் இருந்து திரும்பப்பெற்றுக்கொண்ட ரூபா 41.5 மில்லியன் பெறுமதியான வேலைப்பராமரிப்பு முற்பணம் நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழில் இருந்து கழிக்கப்பட்ட ரூபா 20.5 மில்லியன் பெறுமதியான பிடிகாசு மற்றும் ரூபா 188.70 மில்லியன் பெறுமதியான உறுதிப்படுத்தப்பட்ட வேலை கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவுமில்லை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவுமில்லை.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

இதுவரையான நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2017 ஆம் ஆண்டின் போது | | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடீபீ | 70 | 9,025 | 1,515 | 10.25 | 1,473.52 | 22.04 | 3,222.47 |
| ஜீஓஎஸ்எல் | 25 | 3,223 | 700 | 4.37 | 633.00 | 20.07 | 2,933.86 |
| | **95** | **12,248** | **2,215** | **14.62** | **2,106.52** | **42.11** | **6,156.33** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) மேற்கூறிய தகவலின் அடிப்படையில், மொத்த நிதி ஒதுக்கீட்டில் ரூபா 9,025 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 70 மில்லியன் கடன் வழங்கும் முகவரால் வழங்கப்பட்டது, 2017 திசெம்பர் 31 வரையில் செயற்திட்டம் அமுலாக்கப்பட்டு 3½ வருடங்களின் பின்னர் மொத்த ஒதுக்கீட்டு தொகையில் 31 சதவீதத்தை பிரதிநிதிப்படுத்தும் ரூபா 3,222.47 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 22.04 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் விரிவான செயல் நடவடிக்கைத்திட்டம் மாதாந்தஇ காலாண்டுஇ வருடாந்த நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகளை முழு செயற்திட்ட பொறுப்புக்களுடன் கூடிய கால கட்டத்தில் இலக்குகளை அடைவதற்கு செயற்திட்ட கால எல்லைக்குள் தயாரிக்கப்படவுமில்லை அமுல்படுத்தப்படவுமில்லை. இதனால் ஒதுக்கப்பட்ட நிதியின் பயன்பாடு மெதுவாக காணப்பட்டது.

(ஆ) செயற் திட்டத்தின் வேலை அட்டவணையின் அடிப்படையில் மீளாய்வாண்டிற்கான விரிவான பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் மீளாய்வாண்டில் வரிசை அமைச்சின் பாதீட்டில் ஒமுக்கீடு செய்யப்பட்ட ரூபா 700 மில்லியனில் ரூபா 633 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், ஒப்பந்தப் பொதி-04ன் கீழ் தெற்கு அதிவேக நெடுஞ்சாலைகளை இணைக்கின்ற 06 வீதிகளில் 33 கிலோமீற்றர்களை விரிவாக்குவதற்கும் மற்றும் மேம்படுத்துவதற்கும் செயற்த்திட்டத்தில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. வீதி கட்டுமானப்பணிக்கான பௌதீக முன்னேற்றத்திற்கேற்ப பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

(அ) செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், ஒப்பந்த பொதி-01 இன் கீழ் மொரட்டுவ-பிலியந்தலை வீதியின் 2.50 கிலோமீற்றர் மற்றும் இரத்மலானை-மிரிஹான வீதியின் 2.14 கிலோமீற்றர் மேம்படுத்தல் பணி என்பன மீளாய்வாண்டில் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. எனினும்இ அளவீட்டுப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 134 மில்லியன் பெறுமதியான விடயம் 235 இன் கீழான பணிகள் ஒப்பந்தகாரரின் மூலம் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்த பொதி-03இன் கீழான 04 வீதிகளின் மீள்நிர்மானப்பணி வேலை மீளாய்வாண்டில் 8 சதவீதத்திலிருந்து 61 சதவீதம் வரையான முன்னேற்றமானது வேலை அட்டவணை மாற்றத்தினாலும் ஒப்பந்தக்காரர்களின் போதியளவான செயற்றிறன் இன்மையாலும் மந்தகதியான செயற்பாட்டைகாட்டியது.

(ஆ) கெஸ்பேவவிலிருந்து பொகுவிட்ட வரையான வீதியில் மின்சாரம் மற்றும் தொலைபேசி இணைப்புக்களை பொருத்தும் பணியிலான முன்னேற்றம் மந்தநிலையை காட்டியது, இருப்பினும் மொத்த நிதி ஒதுக்கீட்டின் 68 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சரியாக ரூபா 87.7 மில்லியன் மற்றும் ரூபா 44 மில்லியன் இலங்கை மின்சார சபைக்கும் இலங்கை டெலிக்கொம் கூட்டுத்தாபனத்திற்கும் முறையே வழங்கப்பட்டிருந்தது. மின்சார தூண்கள் மற்றும் மின்மாற்றிகளின் மீள் நிர்மானப்பணிகள் குறித்த காலப்பகுதியில் 69 தொடக்கம் 165 நாட்கள் வரை மந்தகதியான நிலையில் அறிக்கையிடப்பட்டிருந்தது. அதேவேளை தொலைபேசித் தூண்கள் மற்றும் தொலைபேசிப் பெட்டிகளின் மாற்றீட்டுப்பணி 102 நாட்களுக்குரியதை 182 நாட்களுக்கு நீடித்ததன் மூலமாக மந்தகதியான முன்னேற்றத்துடன் காணப்பட்டது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், செயற்திட்டத்தினால் 04 தேசிய வீதிகளின் மீள்திருத்தப்பணிகளுக்காக ஒப்பந்தப்பொதி-04 இன் கீழ் ரூபா 6417 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் மீளாய்வு ஆண்டின் இறுதி வரைக்கும் வழங்கப்பட்டிருந்தன. உண்மைத்தன்மையில்லாத மற்றும் பொருத்தமில்லாத செலவு மதிப்பீடுகளை தயாரித்தல், நிர்மானப்பணித்திட்டங்களில் மாற்றம், வழுவிழந்த மூலவடிவமைப்புக்கள், உரிய பணித்தளங்களை கையளித்தல் செயல்முறையில் உள்ள தாமதம், நிர்மானநியமத்தில் இருந்து விலகல் போன்ற பலவீனங்கள் கட்டுமான பணிகளின் செயற்திறனின்மையில் நேரடித் தாக்கத்தை செலுத்தியிருந்தது. இதனடிப்படையில் பின்வரும் மேலதிக அவதானிப்புக்கள் இது தொடர்பாக இடம்பெற்றன.

(அ) ஒப்பந்தப்பொதி-01இன் கீழ் உள்ள மொரட்டுவ - பிலியந்தல மற்றும் ரத்மலான-மரிஹன வீதிகளின் நிர்மானப்பணிகளிகளின் நம்பத்தகாதசெலவு மதிப்பீட்டின் பெறுபேற்றால், அளவீட்டுப்பட்டியலில் காட்டப்பட்டுள்ள ரூபா 1322 மில்லியன் பெறுமதியான பணிப்பரப்பு பின்னர் குறைக்கப்பட்டிருந்தது. ஆகையால், பணிப்பரப்பின் புதிய மதிப்பீட்டு கிரயமாக ரூபா 654 மில்லியன்

நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இதன் பெறுபேற்றால் வேலைப்பராமரிப்பு முற்பணம் மேலதிகமாக ரூபா 104 மில்லியன் தொகை ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்தது இது வேலை முடிவுத்திகதியான 2017 ஜுன் 19 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒப்பந்தப்பொதி-02இன் கீழ் வழங்கப்பட்ட கெஸ்பேவ இலிருந்து பொகுனுவிட வீதி மற்றும் கிருளப்பன தொடக்கம் ஹோமாகம வரையான வீதியின் மீள் நிர்மாணம் மற்றும் மேன்பாட்டு ஒப்பந்தத்தில் பின்வரும் கண்கானிப்புக்கள் இடம்பெற்றன.

(i) ஆரம்ப பணிப்பரப்பின் கீழ் ஒப்பந்ததிதிற்குள் நுழைந்த பின்னர் கெஸ்பேவ தொடக்கம் பொகுனுவிட்ட வீதி மற்றும் கிருலப்பன தொடக்கம் கோமாகம வீதியின் புனரமைப்பு மற்றும் முன்னேற்றத்தில் மாற்றம் காணப்பட்டது. ஆகையால், வீதியின் நீள ஒழுங்கு 1.52 கிலோமீற்றர் இனால் குறைக்கப்பட்டதனால் வீதியின் ஒட்டுமொத்த நீளத்தில் 5.63 கிலோமீற்றர் இனால் குறைக்கப்பட்டு காணப்பட்டது. எனினும் மேற்படி மாற்றம் தொடர்பான செயற்திட்டத்தினால் தொழிநுட்பமதிப்பீட்டு குழு மற்றும் பெறுகைக்குழுவின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) 2017 திசெம்பர் மாதத்திற்கான செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம், ஒப்பந்தக்காரரினால் 13 முரண்பாட்டு கட்டணங்கள் நிறைவேற்றல் முகவரின் அனுமதிக்காக ஒப்பந்தகாரரால் சமர்பிக்கப்பட்டிருந்தது, அதில் ரூபா 255 மில்லியன் பெறுமதியான 7 முரன்பாட்டு கட்டணங்கள் செயற்திட்ட பணிப்பாளரால் அனுமதிக்கப்பட்டிருந்தது. அதிலிருந்து ரூபா 46 மில்லியன் பெறுமதியான சாலையிக் கீழான சிறுபாலம் மீளமைப்புக்கான 2 முரண்பாட்டு கட்டணங்கள் ஒப்பந்த வேலைப்பரப்பை தாண்டி இருந்தது அவதானிக்கப்பட்டது.

(iii) ரூபா 129.40 மில்லியன் பெறுமதியான 05 மேலதிக பாலங்கள் அளவீட்டு கட்டணத்தின் கீழ் ஒப்பந்தக்காரரினால் சமர்பிக்கப்பட்ட மேலதிக தொகைமீதான விகித பகுப்பாய்வு செய்யப்படாமல் நிர்மாணிக்கப்பட்டிருந்தது இது அளவீட்டுப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள விகிதங்களுடன் ஒப்படுகையில் 23 சதவீதம் தொடக்கம் 215 சதவீதம் வரை அதிகரித்துக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(iv) ஒப்பந்தக்காரர் பணியில் மந்தநிலையான செயற்பாட்டை கருத்தில் கொள்ளாது தற்காலிக முற்பணக்கொடுப்பனவாக ரூபா 49 மில்லியன் 2017 நவம்பர் மாதம் செலுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(இ) மதுருகொடயில் இருந்து தெற்கு அதிவேக நெடுஞ்சாலை வரையான பிரிவின் புணர்நிர்மானம் மற்றும் முன்னேற்றத்தில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) ஆரம்ப செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம், வீதி புணர்நிர்மானப் பணிகள் 2015 யூலையில் ஆரம்பிப்பதற்கு பட்டியலிடப்பட்டிருந்து. எனினும் ஒப்பந்தமானது 2016 செப்தெம்பரிலேயே வழங்கப்பட்டிருந்தது. மேலும், அளவீட்டு பட்டியலை தயாரிப்பதற்கு முன்னர் சரியான பொறியலாளர் ஆய்வானது செயற்திட்டத்தினால் செய்திருக்கப்படவில்லை. இதன் பெறுபேறாக 2017 திசெம்பர் 31 இல் அளவைப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்த அளவைகள் 5 சதவீதத்திலிருந்து 10,429 சதவீதம்வரை அதிகரித்துக் காணப்பட்டது.

(ii) ஆரம்ப கட்டங்களிலேயே வேண்டப்பட்ட வீதியின் நீளம் எவ்வளவு தூரம் புனர்நிர்மானம் செய்யப்பட வேண்டும் என்பது செயற்திட்டத்தினால் சரியான முறையில் அடையாள படுத்தப்படவில்லை. இதனால், வீதியின் 358

மீற்றர்களுக்கான மேலதிக வேலைகள் உயர் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iii) ஒப்பந்த உடன்படிக்கையின் பகுதி-பீ இன் உப பகுதி 4.25 இன் கீழான தனித்துவமான ஏற்பாட்டின் பிரகாரம், பொதுப்பயன்பாட்டு பொருட்களை இடம் மாற்றுதல், அகற்றுதல் மற்றும் பாதுகாப்பிற்கு ஒப்பந்தகாரரே பொறுப்புடயவராவார். மேலும் 2017 திசெம்பர் 31 இல் முடிவுற்ற சில வேலைகள் 28 நாட்கள் தொடக்கம் 151 நாட்கள் கொண்ட வீச்சுக்குள் தாமதமாக முடிவடைந்து காணப்பட்டது. சில மின்சார கம்பங்கள் அஸ்பால்ட் வேய்தல் வேலையின் பின்னரே அகற்றப்பட்டிருந்தது வெளிக்கள விஜயத்தின் போது வெளிப்படுத்தப்பட்டது இது பாதைப் பணிகளின் தரத்தினை பாதிப்பதாக காணப்பட்டது.

(iv) இருப்பினும் கடின அடித்தள விரிப்பினுடைய அடுக்குகளின் விரிப்பினை உறுதிப்படுத்திக் கொள்ள வீதியின் கடின அடித்தள விரிப்பின் மீது 56 உறுதிப்படுத்தல் பரிசோதனைகள் ஒப்பந்தகாரரால் செற்றப்பட வேண்டியிருந்தது. ஆனால் 33 உறுதிப்படுத்தல் பரிசோதனைகள் மாத்திரமே செய்து முடிக்கப்பட்டிருந்தது. இதனால் மீள் நிர்மான வேலைக்கான தர உத்தரவாத திட்டம் ஒப்பந்தகாரரால் சரியான முறையில் பின்பற்றபடாமையை சுட்டிகாட்டியது.

(ஈ) அம்பத்தல வீதியின் நிர்மான வேலைப்பகுதியில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டது.

(i) காணி மீட்பு கூட்டுத்தாபனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான அபிவிருத்தி பணிகள் ஆரம்ப கட்டத்தில் அங்கீகரீக்கப்பட்டிருக்கப்படவில்லை, இதன் பெறுபேற்றால் ஆரம்ப கட்டத்தில் வரையப்பட்ட வீதியின் அமைப்பு வரைபடமானது நிர்மானப்பனி ஆரம்பித்து 04 மாதங்களின் பின்னரே மாற்றப்பட்டது. மேலும் ஆரம்ப செயற்திட்ட பணிப்பரப்பில் உள்ளடக்கப்பட்டிருந்த 0+000 கிலோமீற்றரிலிருந்து 0+200 கிலோமீற்றர் வரையான வீதியின் மீள் நிர்மாணப் பனிகள் செயற்திட்டத்தினால் நீக்கப்பட்டிருந்தது.

(ii) வேலை வரைபடத்தின் அடிப்படையில், வீதிப்பகுதியில் நிர்மானிக்கப்பட்டிருந்த 300 மில்லிமீற்றர் அகலமுடைய 02 தாங்கு சுவர்கள் பராமரிக்கப்பட வேண்டியிருந்தது. பௌதீக வெளிக்கல விஜயத்தின் போதும் அளவீட்டுப்பார்த்ததன் மூலமும் முந்திய தாங்கு சுவரின் அகலமானது 280 மில்லிமீற்றர் தொடக்கம் 290 மில்லிமீற்றரகளுக்கு இடையில் மீதமாகக் காணப்பட்டது வெளிப்படுத்தப்பட்டது.

## 3.4 நிதிக்கட்டுப்பாட்டில் உள்ள விடயங்கள்

வழங்கப்பட்ட கடனின் பயன்பாட்டில் காணப்பட்ட மந்தகரமான செயற்பாட்டால் பொறுப்புக் கட்டணமாக ரூபா 92 மில்லியன் கடன் வழங்கும் முகவரால் மீளப்பெறப்பட்டிருந்தது.

## 3.5 காணி சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றல் நடவடிக்கைகள்

கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், காணி சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றக் குழுக்களினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைக்கு அமைவாக செயற்திட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட 2069 காணித் துண்டுகளுக்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலதிக இழப்பீடு ரூபா 782 மில்லியன் உள்ளடங்கலாக மொத்த இழப்பீடு ரூபா 2818 மில்லியன் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது.